# கிறிஸ்துவின் முன் உளவாம் தன்மை (Pre–Existence of Christ)

'எக்ஸிஸ்டன்ஸ்' (Existence) என்கிற வார்த்தைக்கு 'இருப்பு' என்ற சொல்லை சிலர் பயன்படுத்துகிறார்கள். இருப்பு என்பதற்கு 'இரும்பு' என்றும் வேறொரு வடிவம் உண்டு. இரயில்வே போலீசுக்கு 'இருப்புப்பாதை காவல்' என்று அழைப்பார்கள். அதுமட்டுமில்லாமல் கையிருப்பு (ஸ்டாக் – Stock) என்பதற்கும் 'இருப்பு' என்ற சொல்லை பயன்படுத்துவார்கள். எனவே எக்ஸிஸ்டன்ஸ் என்பதற்கு 'இருப்பு' என்கிற சொல் பொருந்தாது. ஆனால், சில மொழிபெயர்ப்பாளர்கள் எக்ஸிஸ்டன்ஸ் என்பதை 'உளத்தன்மை' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை உள்ளத்தின் தன்மை என்றும் புரிந்து கொள்ளப்படமுடியும். ஆகவே, எக்ஸிஸ்டன்ஸ் என்கிற சொல்லுக்கு 'உளவாம் தன்மை' என்பது தான் ஓரளவு பொருந்தக் கூடியதாக இருப்பதனால் அதை எடுத்துக்கொள்ளலாம்

Pre – என்பது 'முன்' அல்லது 'முன்பு' அல்லது 'முந்தைய' என்று அர்த்தம். எனவே இந்த Pre–Existence of Christ என்பதை 'கிறிஸ்துவின் முன் உளவாம் தன்மை' என்று நாம் தமிழ்ப்படுத்துகிறோம். யாருமே பிறப்பதற்கு முன்பே இருந்தவர்கள் கிடையாது. நாம் பிறந்தவர்கள்; ஆனால் இயேசு கிறிஸ்துவோ பிறப்பதற்கு முன்பே இருந்தவர். அவர் எப்பொழுதும் இருக்கிறவர்.

- யாதொன்றையும் (தூதர்களையும்) படைப்பதற்கு முன்பே அவர் இருக்கிறவர்
- அவர் இல்லை என்கிற ஒரு காலமே கிடையாது; எல்லா காலத்திலும் அவர் இருக்கிறார்.
- அவருக்கு துவக்கமும் இல்லை; முடிவும் இல்லை.
- அவர் காலத்திற்கு அப்பாற்பட்டவராக எப்போதும் இருக்கிறார்.

இது மிக முக்கியம்! ஏனெனில் அவர் மாம்சத்தில் பிறப்பதற்கு முன்பே இருந்ததினால்தான் அவருடைய அந்த 'மானுட அவதாரம் (பிறப்பு)' நம்முடைய மானிட பிறப்பிலிருந்து வித்தியாசப்படுகிறது. அவர் ஏற்கனவே இருந்தவர் எனவே, அவருடைய பிறப்பு இந்த உலகத்தில் வந்ததாகத்தான் கருதப்படுகிறது நம்மைப்போல பிறந்தவராக அவருடைய பிறப்பு கருதப்படவில்லை.

அவருடைய 'குழந்தை பிறப்பு' என்பது கிறிஸ்துவினுடைய மானிடத் தன்மையின் துவக்கம்தானே ஒழிய; அவருடைய (தெய்வீகத்தின்) துவக்கம் கிடையாது. ஏனென்றால் அவருக்கு துவக்கமும் முடிவும் இல்லை; அவர் முன்பே இருந்தவர்.

- நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் (ஏசாயா 9:6).
- ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (யோவான் 1:1).

இவை யாவும் அவர் ஏற்கனவே இருந்தவர் என்பதற்கான சான்றுகளாகும்.

1. **கிறிஸ்துவின் முன் உளவாம் தன்மைக்கான நேரடி குறிப்பு**

   a. யோவான் 8:56–59 வரை உள்ள பகுதிகளில் இயேசு கிறிஸ்து யூதர்களோடு உரையாடுகிற அந்த உரையாடல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார் (வச.56). அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ, என்று கேட்கும்போது அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் **இருக்கிறேன்** என்று மெய்யாகவே மெய்யாகவே

உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். 'முன்னமே நான் இருக்கிறேன்' என்ற பதத்தைத்தான் அவர் பயன்படுத்தினார். இருந்தேன் என்று சொல்லவில்லை.

யூதர்கள் 'இருக்கிறேன்' என்கிற வார்த்தையை கேட்கும்போதெல்லாம் அவர்களுக்கு யாத்திராகமம் 3:14 தான் ஞாபகம் வரும். ஏனென்றால், அந்தபகுதியில் "இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார்" என்று வார்த்தை வரும். எனவே 'இருக்கிறேன்' என்பது தெய்வத்தினுடைய மாபெரும் அத்தாட்சி. அந்த அத்தாட்சியை அதிகாரத்தோடு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பயன்படுத்தினதினாலே அவர் எப்பொழுதும் இருக்கிறவர்; ஏற்கனவே இருந்தவர்; ஆபிரகாமுக்கு முன்னிருந்தவர் என்பது இயேசு கிறிஸ்துவின் முன் உளவாம் தன்மைக்கான நேரடி குறிப்பாகும்.

b. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. (கொலோ 1:17) தமிழில் சரியான காலகிராமம் வெளிப்படவில்லை. ஆங்கிலத்திலே 'He is before all things' என்று இருக்கிறது; ஆனால் இலக்கண ரீதியாக 'He was' என்றுதான் இருக்கவேண்டும். ஆனால் இங்கு நிகழ் காலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது இதை 'எல்லாவற்றுக்கும் முந்தி இருக்கிறவர்' என்று தமிழில் மொழிபெயர்த்திருக்கவேண்டும். ராஜரீகம் மொழிபெயர்ப்பில் 'அவர் அனைத்துக்கும் முன்பே உள்ளவர்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

<u>**அவருடைய நித்திய தன்மை**</u>

a. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் (எபி 13:8).
b. எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோ 1:18). அநேகர் மரணத்திலிருந்து எழுந்திருந்தாலும் அவர்கள் தங்களுடைய மாம்ச சரீரத்தோடுதான் எழுந்தார்கள்; ஆனால் இயேசுகிறிஸ்து மட்டும்தான் மகிமையின் சரீரத்தோடு எழுந்ததினால் மரித்தோரிலிருந்து எழுந்தவர்களிலும் அவரே முதன்மையானவர்.
c. சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் (கொலோ 1:15). அதினுடைய அர்த்தம் அவர் முந்தியே இருக்கிறவர் என்பதாகும்.
d. குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது (எபி 1:8). உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை (எபி 1:12).

இந்த வசனங்கள் அவருடைய நித்திய தன்மைக்கு சான்றாக இருக்கின்றன.

எனவே அவர் ஏற்கனவே இருக்கிறவர்; அவரே என்றென்றைக்கும் இருக்கிறவர் என்கிற நேரடி சான்றுகளை கொண்டு அவருடைய தெய்வத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

**2. இயேசு கிறிஸ்துவினுடைய முன் உளவாம் தன்மைக்கான மறைமுக சான்றுகள்**

a. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று (யோவான் 1:3).

அவராலே எல்லாம் உண்டானது அதாவது அவர் 'சிருஷ்டிகர்' என்றால் எல்லாம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே அவர் இருக்கிறவர் என்று நாம் மறைமுகமாக பொருள் கொள்ளமுடியும். அதாவது உண்டாக்குதல் (Creation) என்பது எதுவும் இல்லாமல் இருகும்போது எதையோ ஒன்றை உண்டாக்குவது ஆகும்; ஆகவே, அவர் உண்டாக்கினவர் (Creator) என்றால் அவர் ஏதொன்றும் இல்லாமைக்கு முன்பாகவே இருக்கிறார் என்பது பொருளாகும். எனவே, அவர் முன்பே இருக்கிறவர்.

b. அவருடைய தெய்வீக பெயர்களும் கூட அவருடைய தெய்வீகத்தையும் அவர் முன்பே இருந்த தன்மையையும் தெளிவாக விளக்குகின்றன.

   i. **'யேகோவா'** என்ற எபிரெய பதம் (ஆங்கிலத்திலே – LORD) தமிழிலே **'கர்த்தர்'** என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். அந்த கர்த்தர் என்கிற வார்த்தை பழைய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவனுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதே வார்த்தையைத்தான் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசு கிறிஸ்துவை குறிக்க பயன்படுத்தியிருக்கிறார்கள். ஒரு யூதன் தவறியும் கூட தேவனுடைய மகிமையை ஒரு மனிதனுக்கு தரமாட்டான். ஆக, மனித சரீரத்திலே மூன்றரை ஆண்டுகளாக தங்களோடு கூட ஊழியம் செய்தபொழுது அவர்கள் பழகி இருந்ததைப் பார்த்தார்கள். 33½ ஆண்டுகள் அவர் மனித சரீரத்தில் வந்ததைக் கண்டு அவரோடு பழகிய அந்த மக்கள் 'யேகோவா' அல்லது 'கர்த்தர்' என்கிற வார்த்தையை நேரடியாகவே இயேசு கிறிஸ்துவை குறிக்க பயன்படுத்துகிறார்கலெனில் அவர்தான் ஏற்கனவே இருந்த யேகோவாகிய தெய்வம் என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று பொருள்.

   ii. யோவான் 12:38–41 வரைக்கும் இருக்கிற வசனங்களில் ஏசாயா 6ம் அதிகாரத்தில் ஏசாயா கண்ட தீர்க்கதரிசனத்தை அங்கு குறிப்பிட்டு ஏசாயா கண்ட மகிமையை இயேசு கிறிஸ்துவின் மகிமைதான் என்பதாக யோவான் அதை ஒப்பிட்டு பேசுகிறார்.

   iii. பழைய ஏற்பாட்டிலே எப்போதாவது தேவன் தம்மை வெளிப்படுத்தினாரெனில் அது திரித்துவத்தின் இரண்டாம் நபர் மூலமாகத்தான் வெளிப்படுத்தியிருக்கிறார். ஏனெனில் பிதாவை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை; பரிசுத்த ஆவியானவர் பற்றி சொல்லும்போது அவருடைய பெயரே ஆவியானவர் என்பதால் அவரையும் பார்க்கமுடியாது. ஆக, காணக்கூடிய தோற்றத்திலே இறைவன் (பிதா) வெளிப்பட்டிருப்பாரானால் அது திரித்துவத்தின் இரண்டாம் நபராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான் என்று நாம் அறிந்து கொள்ளமுடியும்.

   iv. பழைய ஏற்பாட்டிலே நாம் பல இடங்களில் 'கர்த்தருடைய தூதனானவர்' என்பதை குறித்து நாம் பார்க்கிறோம். அதுவும் கிறிஸ்துவையே காண்பிக்கிறது. எனவே 'யேகோவா' நித்தியமானவர் அதேபோல இயேசு கிறிஸ்துவும் நித்தியமானவர். அதேபோல 'அடோனாய்' என்கிற எபிரெய பெயருக்கும் 'குரியோஸ்' என்கிற கிரேக்க பெயருக்கும் (ஆங்கிலத்தில் – Lord) தமிழில் ஆண்டவர் என்று பொருள்படும்.

c. கிறிஸ்துவின் குமாரத்துவம்

   i. மத் 22:44 = சங்கீதம் 110:1 இங்கேயும் கூட தாவீதினுடைய ஆண்டவராக அவர் சொல்லப்படுகிறார். தேவனாக அவர் தாவீதுக்கு ஆண்டவர். மனிதனாக அவர் தாவீதின் குமாரன். எனவே அவர் தாவீதுக்கு முன்பும் இருக்கிறார்.

   ii. அடுத்து ஒரு பெயர் 'குமாரன்'. (குமாரன் அல்லது தேவகுமாரன்) எப்பொழுதெல்லாம் இந்த குமாரன் என்கிற பெயரை கேட்கிறோமோ அப்போதெல்லாம் நாம் மனித உறவுகளின் அடிப்படையில் புரிந்து கொள்கிறோம். ஆனால் இறையியலை பொறுத்தவரை அப்படி புரிந்து கொள்ளமுடியாது. ஒரு குமாரன் என்பவர் தந்தையினுடைய இயல்பை முற்றிலுமாக வெளிப்படுத்துகிறவராக இருக்கிறார். இங்கே 'இயல்பு (Nature)' தான் முக்கியம்.

கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவை சட்டப்பூர்வமான அல்லது ஒப்பந்த ரீதியான உறவுமுறை என்று சொல்லுவார்கள். ஆனால் ஒரு தந்தைக்கும் மகனுக்கும் இருக்கக்கூடிய உறவுமுறை சட்டப்பூர்வமான அல்லது ஒப்பந்த ரீதியான உறவுமுறை அல்ல; அது இயல்பின் அடிப்படையில் அதாவது குணத்தின் அடிப்படையில் வருகிறது அதாவது ஒரு தந்தையுனுடைய இயல்பானது மகனுக்கு பிறப்பின் மூலமாக கடத்தப்படுகிறது. கணவன் மனைவி உறவை முறித்துக் கொள்ளமுடியும் ஆனால் தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவு எடுத்துக்கொள்ளப்படமுடியாது அதுபோலதான் பிதாவாகிய தேவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்குமுள்ள 'அந்த இயல்பை' புரிந்துகொள்கிறோம். தெளிவாக சொன்னால்: ஒரு சிங்கத்தின் மகன் ஒரு சிங்கம்; ஒரு மனிதனுடைய மகன் ஒரு மனிதன்; அதுபோல தேவனுடைய குமாரன் தேவன். தேவகுமாரன் என்கிற பதம் அவர் தேவன் என்பதற்கான சான்றாக இருக்கிறது. அவர் தேவன் என்றால் அவர் எப்போதும் இருக்கிறார்;

- காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார் (கலாத்தியர் 4:5)
- நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் (ஏசாயா 9:6)
- தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார் (யோவான் 3:16,17).

இந்த இடங்களிலெல்லாம் அவர் 'தேவனுடைய குமாரன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய புத்திர தன்மைக்கும் அதாவது நம்முடைய குமாரத்துவத்திற்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் குமாரத்துவத்திற்கும் வித்தியாசம் உண்டு. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிதாவினுடைய 'ஏக புத்திரன்' அல்லது 'ஏசுதன்' அல்லது 'ஒரே பேரான குமாரன்' என்று சொல்லப்படும்பொழுது 'அவர் பிதாவின் தன்மையை' உடையவராக இருக்கிறார் ஆனால் 'நாமோ பிதாவின் தன்மையுடையவர்களாக இல்லாமல் அந்த தன்மைக்கு சொந்தக்காரர்களாக' அதாவது சுவீகரிக்கப்பட்ட புத்திரர்களாக (Adopted son) இருக்கிறோம். நாம் சுவீகரிக்கப்பட்ட புத்திரர்களாக இருப்பதனாலேயே நமக்கு 'பழைய இயல்பு' என்ற ஒன்று இருக்கிறது. அந்த பழைய இயல்புக்கும் இரட்சிக்கப்பட்ட பிறகு நமக்கு ஒரு புதிய இயல்பு அதாவது 'தேவனுடைய இயல்பு' கொடுக்கப்படுகிறது. இந்த இரு இயல்புக்கும் இடையே எப்போதும் ஒரு போராட்டம் இருந்துகொண்டேயிருக்கும். ஆனால் இப்படிப்பட்ட ஒரு போராட்டம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இல்லை ஏனென்றால் அவர் பிதாவின் இயல்பை மட்டும் கொண்டவர். அவர் மனிதனாக பிறந்திருந்தாலும் கூட பாவஇயல்பு அவரை மேற்கொள்ளவில்லை ஏனெனில் அவருடைய பிறப்பு பரிசுத்தமானது.

நம்முடைய இரண்டு இயல்புகளுக்கும் நடுவிலே ஒரு போராட்டம் எப்பொழுதுமே இருக்கும். ஆகவே, நாம் அந்த புதிய இயல்பைதான் அதிகமாக போஷிக்கவேண்டும். நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (1 பேதுரு 2:3) என்று பேதுரு குறிப்பிடுகிறார். ஆக நாம் நம்முடைய புதிய இயல்பை திருவசனத்தைக்கொண்டு போஷிக்கவேண்டும்.

d. கர்த்தருடைய தூதனானவர் (Angel of the Lord)

தமிழிலே 'கர்த்தருடைய தூதனானவர்' என்று சில இடங்களிலும் 'தேவதூதன்' என்று பல இடங்களிலும் நாம் பார்க்கலாம். தேவதூதன் அல்லது கர்த்தருடைய தூதன் என்று வருகிற இடங்களில் எல்லாம் அது சாதாரண தேவதூதர்களை குறிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால் கர்த்தருடைய தூதனானவர் என்று எங்கெல்லாம் வருகிறதோ அந்த இடங்களிலெல்லாம் நம்முடைய தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய முன் உள்ள தன்மை அதாவது அவர் ஏற்கனவே மாம்சத்தில் இருந்த அந்த தன்மையைக் குறிக்ககூடிய ஒரு சொல்லாக இருக்கிறது. அதை ஆங்கிலத்தில் 'Theophanys' என்று சொல்வார்கள் அதாவது 'The appearance of God' (தேவனுடைய தோற்றம்) என்பதாகும். ஆங்கிலத்தில் 'The Angel' என்று வருகிறதெல்லாம் இந்த கர்த்தருடைய தூதனானவர் பற்றியதாகும். 'an angel' என்று வந்தால் அது தேவதூதனை பற்றியதாகும்.

ஆதியாகமம் 16:7–13 ம் வசனம் வரை 'கர்த்தருடைய தூதனானவர்' குறித்து பார்க்கிறோம். அவர் அதிகாரத்தோடு பேசுவதை பார்க்கிறோம். ஆதியாகமம் 16:7,9,10,11 ஆகிய வசனங்களில் கர்த்தருடைய தூதனானவர் என்று வருகிறது. பதின்மூன்றாம் வசனத்திலே தன்னோடே பேசின 'கர்த்தருக்கு' என்று சொல்லப்பட்டிருக்கிறது எனவே, கர்த்தருடைய தூதனானவர் என்று சொல்லப்படுபவது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் முந்திய நிலைமையை குறிக்ககூடியதாக இருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் தேவன் மனித தோற்றம் எடுத்துவந்ததை மக்கள் பார்க்கும்பொழுது அவர்கள் 'கர்த்தரை' கண்டோம் என்று சொன்னார்கள் (ஆதி 22:11; யாத் 3:2; நியா 2:1–4). எனவே பழைய ஏற்பாட்டிலே கர்த்தருடைய தூதனானவர் என்று வருகிற இடங்களில் வருபவர் நம்முடைய தேவகுமாரன்தான். புதிய ஏற்பாட்டிலே தூதர்கள் பற்றி வாசிக்கமுடியும் ஆனால் கர்த்தருடைய தூதனானவர் பற்றி வாசிக்கமுடியாது ஏனென்றால், அவர் மாம்சத்தில் வெளிப்பட்டுவிட்டார். பிதாவை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை (யோவான் 1:18). பழைய ஏற்பாட்டில் கர்த்தரை கண்டதாக கூறப்படுகிற சம்பவங்களில் எல்லா இடத்திலேயும் தேவகுமாரனின் முந்திய தோற்றத்தைதான் கண்டிருக்கிறார்களே தவிர கர்த்தரை ஒருவரும் ஒருகாலும் காணமுடியாது. எனவே கர்த்தருடைய தூதனானவர் என்கிற பெயரின் மூலமாக அறியப்படுகிறவரும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான்! அவர் மனித தோற்றம் எடுப்பதற்கு முந்தைய நிலையில் அவர் அவ்விதமாக தோற்றமளித்தார். அதை ஆங்கிலத்தில் 'Theophanys' என்று சொல்லுகிறோம்.